# Ubin Tides

乌敏岛
ISSUE 9
May 2022 - Oct 2022
PULAU UBIN



*கோலி பாஞ்சாங்* விளையாடுபவர்கள், எதிரணியினரின் கோலிகளை வட்டத்திற்கு வெளியே தட்டிவிட முயற்சிக்கின்றனர். அதிகமான கோலிகளை அவ்வாறு செய்பவர் வெற்றி பெறுகிறார்

## பெஸ்டா உபின் 2022

பெஸ்டா உபின் இந்த ஆண்டு ஜூன் 4 முதல் 25 வரை பிரம்மாண்டமாகத் திரும்பிவந்தது! தேசிய பூங்காக் கழகமும் உபின் நண்பர்கள் கட்டமைப்பும் (FUN) ஆதரவளித்த இந்த ஒரு மாதக் கொண்டாட்டத்தில், 120 தொண்டூழியர்களைக் கொண்ட 15 குழுக்கள் ஏற்பாடு செய்த 22 நடவடிக்கைகள் நடைபெற்றன. இந்த ஆண்டின் நடவடிக்கைகளில் 640-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

பெஸ்டா உபின் 2022, விறுவிறுப்பான பலதரப்பட்ட நடவடிக்கைகளை உபின் தீவுக்கு மீண்டும் வரவேற்றது. *காசிங்* (பம்பரம் சுற்றுதல்), *கோலி பாஞ்சாங்* (கோலிகள்), பாண்டி விளையாட்டு, *சாப்தே* (இறகுப்பந்தை உதைத்தல்) போன்ற *கம்போங்* விளையாட்டுகளைப் பங்கேற்பாளர்கள் விளையாடி மகிழ்ந்தனர். சுற்றுலாக்கள் மற்றும் சமூக மலையேறும் நடவடிக்கைகள் மூலம், அவர்கள் உபினின் வாழும் மரபுடைமையில் மூழ்கினர். மேலும், உபினின் வளமான பல்லுயிரியலை எடுத்துக்காட்டிய கண்காட்சிகளிலும், வழிகாட்டியுடனான நடைப் பயணங்களிலும் கலந்து கொண்டனர். வெகுநாள் எதிர்பார்த்திருந்து காத்திருந்த ஏற்பாட்டாளர்களுக்கு, பெஸ்டா உபின் மூலமாக ஒவ்வொருவரையும் நேரில் சந்திக்கும் வாய்ப்பாகவும் அது அமைந்தது.

2022 ஜூன் 25 அன்று உபின் தினம் அனுசரிக்கப்பட்டதோடு, பெஸ்டா உபின் ஒரு நிறைவுக்கு வந்தது. சிறப்பு விருந்தினரான சமூக, கலாசார, இளையர் அமைச்சர் எட்வின் தொங், தீவின் கிராமவாசிகளின் நலனுக்காகப் பற்பல திட்டங்களை அறிவித்தார். வயதானவர்களுக்கான தனிப்பட்ட எச்சரிக்கை பொத்தான்கள், கிராமத்தின் மின்சாரத் தேவைகளில் 90 சதவீதத்தை வழங்கும் விரிவாக்கப்பட்ட சூரிய மின்சக்தித் தொகுப்பு, தீயணைப்பு வசதிகளான தீயணைப்பு நீர்க்குழாய்கள் மற்றும் குழாய்ச்சுருள்கள் ஆகியவை இதில் உள்ளடங்கும். உபின் தீவில் உயிரினங்களை மீட்பதிலும் வாழ்விடத்தை மேம்படுத்தும் முயற்சிகளிலும் அடைந்திருக்கும் முன்னேற்றங்களையும் அமைச்சர் அறிவித்தார். இதில் நீலத்தொண்டை தேனீ உண்ணியின் வெற்றிகரமான கூடடைதல், தீவில் சிறிய விசில் வாத்தின் முதல் முதலான இனப்பெருக்கம் ஆகியவை ஆவணப்படுத்தப்படுவதும் உள்ளடங்கும்.



மலாய் *கம்போங்கை* சுற்றிப் பார்த்த நடை பயணத்தின் ஒன்றின்போது, ஒரு வீட்டின் முன் புகைப்படம் எடுத்துக்கொண்ட பங்கேற்பாளர்கள்



செக் ஜாவாவில் காணப்படும் பல்வேறு வகையான கடல் உயிரின வகைகளைப் பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தும் யங் நௌடிலஸ் தொண்டூழியர்கள்



அமைச்சர் டெஸ்மண்ட் லீ மற்றும் சிறப்பு விருந்தினரான அமைச்சர் எட்வின் தொங் சிறப்பித்த உபின் தினம் *2022*

தேசிய வளர்ச்சி அமைச்சர் டெஸ்மண்ட் லீ, அமைச்சர் எட்வின் தொங்கிற்குத் தீவைச் சுற்றிக் காட்டினார். சுற்றுலாவின்போது, “ஒரு மில்லியன் மரங்கள்” இயக்கத்தின் ஒரு பகுதியாக, சமூகத்தோடு சேர்ந்து 50 மரங்களை நடும் வாய்ப்பை அவர்கள் பெற்றனர். ஆ மா பானக் கடையின் உரிமையாளரான ஆ மா அவர்களை அவரது வீட்டிலும் கடையிலும் சந்தித்தனர். செக் ஜாவா ஈரநிலங்களைச் சுற்றியுள்ள காட்சிகளையும் கண்டுகளித்தனர்.

பெஸ்டா உபின் நடவடிக்கைகளில் அனைவரும் உற்சாகமாக பங்களித்ததைக் காண்பது ஊக்கமளிப்பதாக இருந்தது. இந்த விழாவின் எதிர்காலப் பதிப்புகள் சிறப்பாக இருக்கும் என்பதற்கு இது ஒரு சான்றாக விளங்குகிறது!

இரவு நேரத்தில் வெளியே வரும் வனவிலங்குகளைப் பார்க்கச் சென்றபோது, குடும்பங்கள் ஒருவருக்கொருவர் பிணைந்து மகிழ்ந்தார்கள்



## உபின் தீவில் இயற்கை மற்றும் கலாசார மரபுடைமைப் பயிலரங்குகள்

உபின் தீவின் இயற்கை மற்றும் கலாசார மரபுடைமையைக் காட்சிப்படுத்த, 2021 டிசம்பர் மாதம் “பெட்டர் ட்ரெய்ல்ஸ்” மற்றும் “வீல்ஸ் ஃபியூச்சர்” வழிநடத்தும் பயிலரங்குகளுக்கு தேசிய பூங்காக் கழகம் ஏற்பாடு செய்திருந்தது. பயிலரங்குகளின்போது என்ன நடந்தது என்பதன் ஒரு பார்வை இங்கே.

**“செக் ஜாவாவின் கடற்கரைகளுக்கு வண்ணம் தீட்டுதல்” இயற்கை மரபுடைமைப் பயிலரங்கு**

“செக் ஜாவாவின் கடற்கரைகளுக்கு வண்ணம் தீட்டுதல்” பயிலரங்கின் பங்கேற்பாளர்கள், “பெட்டர் ட்ரெய்ல்ஸ்” ஒருங்கிணைப்பாளர்களைச் சந்திக்க, சாங்கிப் பாய்ண்ட் படகு முனையத்தை வந்தடைந்ததுடன் இந்த நாள் தொடங்கியது. பங்கேற்பாளர்கள் பலருக்கும், முதல் முறையாக ஒரு சிறிய சரக்குப்படகில் பயணம் செல்லும் அனுபவமாக இது அமைந்தது! சூரிய ஒளியில் நனைந்து, கடல் காற்றை அனுபவித்து, விரைவில் உபின் தீவை வந்தடைந்த பங்கேற்பாளர்கள், தீவின் ஊக்கமளிக்கும் இயற்கைப் பாதுகாப்புக் கதையையும் வளமான பல்லுயிரியலையும் பற்றி அறிந்துகொள்ள, செக் ஜாவா ஈரநில வருகையுடன் தங்களின் சுற்றுலாவைத் தொடங்கினர்.



பங்கேற்பாளர்கள் முதல் முறையாக ஒரு சிறிய சரக்குப் படகில் ஆர்வத்துடன் பயணம் செய்தனர்

அந்த நடைப்பயணத்தை நிறைவுசெய்ய, பங்கேற்பாளர்கள் செக் ஜாவா ஈரநிலத் தடத்தில் கிடைத்த அனுபவத்தை, ஒருங்கிணைப்பாளர்களின் வழிகாட்டுதலின்கீழ், ஒரு குடும்ப ஓவியமாகத் தீட்டினர். பஞ்சுகள், முள் கரண்டிகள் போன்ற வழக்கத்திற்கு மாறான பொருட்களைப் பயன்படுத்தும் புதிய ஓவிய நுட்பங்களையும் ஒருங்கிணைப்பாளர்கள் பகிர்ந்துகொண்டனர்.





(இடது): ஒரு பங்கேற்பாளர் ஒரு பஞ்சைக்கொண்டு “செக் ஜாவாவின் கடற்கரைகளுக்கு வண்ணம் தீட்டுகிறார்”;
(வலது): செக் ஜாவா ஈரநிலங்களில் தாங்கள் பெற்ற அனுபவத்தைப் பிள்ளைகளும் வரைந்தனர்

**“மறைந்திருக்கும் புதையல்” கலாசார மரபுடைமைப் பயிலரங்கு**

அதே நாள் பிற்பகலில், உற்சாகமான பங்கேற்பாளர்களைக் கொண்ட ஒரு புதிய குழுவுக்கு, “வீல்ஸ் ஃபியூச்சர்” இரண்டாவது பயிலரங்காக “மறைந்திருக்கும் புதையல்” அங்கத்தை நடத்தியது. உபின் தீவின் வரலாற்று மற்றும் கலாசாரப் பொக்கிஷங்களைக் கண்டுபிடிப்பதற்காக, தீவைச் சுற்றிவரும் ஒரு சைக்கிள் பயணத்தில் ஒருங்கிணைப்பாளர்கள் பங்கேற்பாளர்களை அழைத்துச் சென்றார்கள்.



**உபின் தீவில் உள்ள முக்கியமான இடங்களை எப்படி வரைபடத்தில் காட்டுவது என்பதைப் பங்கேற்பாளர்கள் கற்றுக்கொள்கிறார்கள்**

பயிலரங்கின்போது, பங்கேற்பாளர்கள் உபின் லிவிங் லேப் ஆய்வுக் கூடத்திற்குச் சென்று, உபின் தீவின் வரலாற்று உண்மைகளை அறிந்து கொண்டார்கள். உபின் தீவின் வரைபடத்தில் உள்ள சில முக்கியமான இடங்களைக் கண்டுபிடிக்கும் குழு நடவடிக்கையிலும் அவர்கள் பங்கெடுத்தனர். அதோடு, ஆ மா பானக் கடைக்கும் உபின் தீவின் ஆக உயரமான இடமான புவாகா குன்றுக்கும் சென்றனர்.

இந்தப் பயிலரங்கு, பங்கேற்பாளர்களிடையில், குறிப்பாகப் பிள்ளைகளிடையில், நல்ல வரவேற்பைப் பெற்றது. பங்கெடுத்த பிள்ளைகளில் பலரும் உபின் தீவுக்கு முதல் முறையாக வருகை அளித்திருந்தனர். “சதுப்புநிலக் கலையின் கதை”, “உபினின் பாதுகாக்கப்பட்ட உயிரினங்களின் ஓவியம்”, “என் உபின் கோட்டோவியம்” போன்ற எதிர்காலத்தில் வரவிருக்கும் பயிலரங்குகளில் பங்குகொள்ளவும் அவர்கள் ஆர்வம் காட்டினர்.




**ஆ மா பானக் கடைக்கும் பங்கேற்பாளர்கள் சென்றனர்**

பயிலரங்குகளில் பங்கெடுத்து, உபின் தீவைப் பற்றி மேலும் அறிந்துகொள்ள உங்களுக்கும் ஆவலாக இருக்கிறதா? தேசிய பூங்காக் கழகத்தின் நிகழ்ச்சிகள் மற்றும் நடவடிக்கைகள் பக்கத்தில் இந்தப் பயிலரங்குகளை எதிர்பார்த்திருங்கள்!

**உபின் தீவில் நடைபெறவிருக்கும் பயிலரங்குகளைப் பற்றி மேலும் தெரிந்துகொள்ள இந்த விரைவுத் தகவல் (QR) குறியீட்டை வருடுங்கள்**

NATIONAL PARKS
LET'S MAKE SINGAPORE OUR CITY IN NATURE

FRIENDS OF UBIN NETWORK

Share your love for nature and animals at
#NParksBuzz #AnimalBuzzSG

# ஒரு மில்லியன் மரங்களோடு நமது வாழ்விடங்களை மேம்படுத்துதல்

சிங்கப்பூர் முழுவதும் மேலும் ஒரு மில்லியன் மரங்கள் நடுவதே, “ஒரு மில்லியன் மரங்கள்” இயக்கத்தின் நோக்கம். இயற்கையில் ஒரு நகரத்தை உருவாக்க தேசிய பூங்காக் கழகம் மேற்கொள்ளும் முயற்சியின் ஒரு பகுதியாக இந்த இயக்கம் அமைகிறது. இதன்வழி, நம் நகரத்தில் இயற்கை மீண்டும் துளிர்விடுவதோடு, சமூக நடுதல் மூலம் குடிமக்களும் இயற்கையோடு நெருக்கமடைவார்கள்.

ONE MILLION TREES MOVEMENT



கரையோரத் தாவரவியல் ஆய்வுப் பூங்காப் பகுதியில் கிரியேட்டிவ் ஓ ப்ரீஸ்கூலர்ஸ்’ பே மாணவர்கள் “ஒரு மில்லியன் மரங்கள்” இயக்கத்தின்கீழ் மரங்கள் நட்டனர்

தற்போது, உபின் தீவில் காடுகளைச் சீரமைக்கும் முயற்சிகளும் உயிரினங்களின் வாழ்விடத்தை மேம்படுத்தும் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. “ஒரு மில்லியன் மரங்கள்” இயக்கத்திற்கு ஆதரவாக, 200-க்கும் மேற்பட்ட உள்ளூர் தாவர இனங்களைச் சேர்ந்த சுமார் 30,000 மரங்கள் 2020 முதல் 2030 வரை நடப்படும்.

2022-ஆம் ஆண்டில், உபின் தீவில் 12 இடங்களில் 200-க்கும் மேற்பட்ட தாவர இனங்களைச் சேர்ந்த 3,000-க்கும் மேற்பட்ட மரங்கள் நடப்படும். அவற்றில் சிறிய இலைகளைக் கொண்ட ஜாதிக்காய் (*நீமா கார்டிகோசா*), டங்கன் (*ஹெரிடியரா லிட்டோராலிஸ்*), செங்கால் (*நியோபலனோகார்பஸ் ஹெய்மிஜ*) ஆகியவை உள்ளடங்கும். இந்த மரம் நடும் நிகழ்வுகளில் பெரும்பாலானவை தீவுக்குள் உள்ள வன வாழ்விடங்களின் இணைப்பையும் பரப்பையும் மேம்படுத்துவதற்கான காடுகளைச் சீரமைக்கும் முயற்சிகளின் ஒரு பகுதியாகும்.

**சமூகத்தின் ஈடுபாடு**

“ஒரு மில்லியன் மரங்கள்” இயக்கத்தின் வெற்றிக்கு சமூக ஈடுபாடு மிகவும் முக்கியம். 2020-ஆம் ஆண்டு முதல், பசுமையான எதிர்காலத்திற்கான முயற்சிகளில் 20-க்கும் மேற்பட்ட சமூகக் குழுக்களின் பங்களிப்பை உபின் தீவு ஈர்த்துள்ளது.



அமைச்சர் எட்வின் தொங் (இடது), அமைச்சர் டெஸ்மண்ட் லீ (வலது) ஆகியோர் *2022*-ஆம் ஆண்டு உபின் தினத்தின்போது தாங்கள் நட்ட மரத்திற்கு நீர் ஊற்றுகின்றனர்



**வனவிலங்குகளின் வாழ்விடங்கள்**

தேசிய பூங்காக் கழகத்தால் கண்காணிக்கப்படும், “ஒரு மில்லியன் மரங்கள்” இயக்கத்தின்கீழ் நடப்படும் மரங்கள், புதிய வாழ்விடங்களை வழங்குவதுடன் வெவ்வேறு வனப் பகுதிகளுக்கு இடையில் இணைப்பையும் உருவாக்குகின்றன.

சீரமைப்புடன் மீண்டும் காடாக்கப்பட்ட இந்தப் பகுதிகள், உணவை அல்லது துணைகளைத் தேடிச் செல்லவும், பெரிய வன வாழ்விடங்களை அனுபவிக்கவும் நமது உள்ளூர் வனவிலங்குகள் காட்டுப் பகுதிகளைப் பாதுகாப்பாகக் கடந்து செல்ல உதவியுள்ளன. காடு சீரமைப்புக் கண்காணிப்பின்போது பதிவு செய்யப்பட்ட சில அற்புதமான உயிரினங்கள் இவை!

தேசிய பூங்காக் கழக ஊழியர்களும் தொண்டூழியர்களும் காடு சீரமைப்புக் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர் (புகைப்பட உதவி: ஜாக் யாம்)

எளிதில் தென்படாத பாலூட்டியான பெரிய சருகுமான் (*டிராகுலஸ் நாபு*), உபின் தீவில் காணப்படும் ஒரே சருகுமான் இன விலங்காகும். இது தீவெங்கிலும் உள்ள காடு சீரமைப்புப் பகுதிகளின் அடிவாரங்களில் காணப்படுகிறது. சருகுமான் பொதுவாகத் திறந்தவெளிப் பகுதிகளில் காணப்படுவதில்லை. எனவே, “ஒரு மில்லியன் மரங்கள்” இயக்கம், பசுமையான மேற்பரப்பு மறைப்பை உருவாக்கித்தர உதவுகிறது. இது சருகுமான்கள் சுலபமாக நடமாடுவதற்கு உதவுவதோடு, அவற்றின் எண்ணிக்கையைப் பெருக்கவும் உதவும் என நம்பப்படுகிறது.






பெரிய சருகுமான் (புகைப்பட உதவி: மொஹமட் அஸ்லின் பின் சனி)



வெள்ளைவால் ஷாமா (புகைப்பட உதவி: ஜோசப் லின்)



சுமத்ரா பனை புனுகுப்பூனை (புகைப்பட உதவி: ராபர்ட் டியோ)

வெள்ளைவால் ஷாமா (*கோப்ஸிகஸ் மலபாரிகஸ்*) என்பது இனிமையான குரல்கொண்ட ஓர் அழகான பாடும் பறவையாகும். இது இப்போது உபின் தீவில் பரவலாகக் காணப்படும் ஒரு பறவையாகத் திகழ்கிறது. இந்தப் பறவைகளின் வாழ்விடங்களை இணைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட காடு சீரமைப்பு முயற்சிகளின் பலனாகக் காட்டுப் பகுதிகளுக்கிடையே அதிகரித்திருக்கும் தொடர்புகள் இதற்குக் காரணம்.

சீரமைக்கப்பட்ட காட்டுப் பகுதிகளில் அடிக்கடி காணப்படும் சுமத்ரா பனை புனுகுப்பூனை (*பாரடாக்ஸூரஸ் முசாங்கஸ்*) என்பது சிறிய இரைகளையும் பழங்களையும் உண்ணும், இரவு நேரத்தில் வெளியே வரும் ஒரு விலங்காகும். இந்தப் புனுகுப்பூனை, தாவரங்களைப் பரப்புகின்ற ஒரு முக்கியமான சுற்றுச்சூழல் சேவையை வழங்குகிறது. தான் உண்ணும் பழங்களின் விதைகளை, இரை தேடிச் செல்லும் பகுதிகளில் பரப்புவதன் மூலம் புனுகுப்பூனை இதைச் செய்கிறது.

**“ஒரு மில்லியன் மரங்கள்” இயக்கத்தில் சேருங்கள்**

இயற்கையில் ஒரு நகரத்தை உருவாக்கும் எங்கள் முனைப்புக்கு நீங்கள் பங்களிக்க விரும்பினால், உங்கள் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் பயன்மிக்க முறையில் நேரம் செலவிட விரும்பினால், கீழே உள்ள விரைவுத் தகவல் (QR) குறியீட்டை வருடி, உபின் தீவில் அல்லது சிங்கப்பூர்ப் பெருநிலத்தில் நடவு வாய்ப்புகளைத் தேடுங்கள்!

“ஒரு மில்லியன் மரங்கள்” இயக்கத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள வருடுங்கள்